farmers are more attracted to sell it to F.C.I. என்ற தகவல் பத்திரிகைகளிலே எல்லாம் கூட வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே மாநில அரசு 15, 20 ரூபாய் என்று போக்குவரத்து மற்ற மற்ற வகையிலே எப்படிக் கூட்டிக் கொடுக்கிறார்களோ அதைப்போன்று—மத்திய சர்க்கார் தடையாக இருக்கிறது, நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள்—இன்னும் 10 ரூபாய் வேறு கணக்குக் காட்டி கூட்டிக் கொடுக்க என்ன கஷ்டம் இருக்கிறது? அதே நேரத்திலே வெய்ட்ஸ் எல்லாம் சரியாக இல்லை என்று சொல்கிறார்கள், அதையெல்லாம் சரிப்படுத்தி சீர்படுத்தி நல்ல வகையிலே எடுத்துக் கொள்வதற்கும் அதிக விலையைக் கொடுப்பதற்கும் நான் கூறிய ஏற்பாட்டின்படி அரசாங்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆத்திரப்படாமல் நிதானமாகப் பதில் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: டாக்டர் ஹாண்டேயைப் போல் நான் ஒருக்காலும் ஆத்திரப்படவே மாட்டேன். மத்திய சர்க்காருக்குச் சொந்தமான எப்.சி.ஐ.யை அவர்கள் புகழ்ந்ததிலே எனக்கு ஆச்சரியமில்லை. அதைவிட பல மடங்கு நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உன்னதமான முறையிலே செயல் படுகிறது, புரக்யூர் செய்துவருகிறது. மத்திய சர்க்காரைக் கேட்காமலேயே இன்னும் ஒரு 15 ரூபாயை உயர்த்திக்கொடுத்து மேலும் மத்திய அரசினுடைய பகையை அதிகப்படுத்திக் கொள்வது சரியல்ல.

Handicrafts Development Corporation

* 291 *Q.*—THIRU B VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Handicrafts Development Corporation had organised an exhibition in Bombay in 1974; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகம் பம்பாயில் உள்ள குமாரசாமி அரங்கில் 19—10—1974 முதல் 30—10—1974 வரை பொருட்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்தது. இந்தப் பொருட்காட்சியை ஏற்பாடு செய்ய ரூ. 18,836.75 (ரூபாய்

1975 மார்ச் 12]

பதினெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறும் பைசா எழுபத்தைந்து மட்டும்) செலவாகியது. இந்த பொருட்காட்சியில் கைவினைப் பொருள் கழகம் ரூ. 99,858.75 (ரூபாய் தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தெட்டும் பைசா எழுபத்தைந்து மட்டும்) மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்தது.

*292 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகாரில் தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் செயல்படத் துவங்கிவிட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இந்த கைவினைப் பொருள் அபிவிருத்திக் கழகமானது பெரிய நகரங்களிலே கண்காட்சி நடத்துவதின் மூலமாக சிறந்த முன்னேற்றமான முறையை ஏற்படுத்தி நம்முடைய கைவினைப் பொருட்கள் அதிகமாக விற்க ஏற்பாடு செய்திருக்கிறது. குறிப்பாக தமிழ் நாட்டிலேயிருந்து தயாரிக்கப்படுகின்ற பாய் போன்றவை அதிகப் படியாக விற்கக்கூடிய அளவிலே அவற்றையும் கண்காட்சியிலே வைத்து விற்க ஏற்பாடு செய்வார்களா? கோரை பாய் தொழிலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்க்கை அடங்கியிருக்கிறது, அதனுடைய விற்பனை தற்போது குறைவாக இருக்கிறது. ஆகவே இந்த கைவினைப் பொருள்கள் அபிவிருத்திக் கழகம் அதையும் எடுத்துக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பம்பாயிலே நடைபெற்ற கண்காட்சியிலே பாய் ரூ. 7,302-க்கு விற்றது. டிமாண்டை பொறுத்துத்தான் விற்பனை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ள பூம்புகாரிலே கைவினைப் பொருள் கழகம் இன்னும்